# குழந்தைப் பாடல்கள் 1



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# குழந்தைப் பாடல்கள்

| | |
|---|---|
| 1. | நிலா நிலா ஓடி வா... |
| 2. | அணிலே,அணிலே,ஓடிவா |
| 3. | தோசையம்மா தோசை |
| 4. | வட்ட மான தட்டு |
| 5. | கைவீசம்மா கைவீசு |
| 6. | மாம்பழமாம் மாம்பழம் |
| 7. | பொம்மை பொம்மை பொம்மை பார் |
| 8. | தோ... தோ... நாய்க்குட்டி |
| 9. | சிட்டே சிட்டே பறந்து வா |
| 10. | குள்ள குள்ள வாத்து |

# 1 நிலா நிலா ஓடி வா...



நிலா நிலா ஓடி வா
நில்லாமல் ஓடி வா
மலை மேலே ஏறி வா

மல்லிகைப் பூ கொண்டு வா
பட்டம் போலப் பறந்து வா
பம்பரம் போல் சுற்றி வா

# 2 அணிலே அணிலே ஓடி வா

அணிலே, அணிலே, ஓடி வா
அழகு அணிலே ஓடி வா
கொய்யா மரம் ஏறி வா
குண்டுப்பழம் கொண்டு வா
பாதிப் பழம் உன்னிடம்
பாதிப் பழம் என்னிடம்
கூடிக்கூடி இருவரும்
கொறித்துக் கொறித்து திண்ணலாம்



# 3 தோசையம்மா தோசை

தோசையம்மா தோசை
அம்மா சுட்ட தோசை
அரிசி மாவும் உளுந்த மாவும்
கலந்து சுட்ட தோசை
அப்பாவுக்கு நான்கு
அம்மாவுக்கு மூன்று
அண்ணனுக்கு இரண்டு
பாப்பாவுக்கு ஒன்று
தின்னத் தின்ன ஆசை
திருப்பிக் கேட்டால் பூசை



# 4 வட்ட மான தட்டு

வட்ட மான தட்டு
தட்டு நிறைய லட்டு
லட்டு மொத்தம் எட்டு
எட்டில் பாதி கிட்டு
மீதம் உள்ள லட்டு
முழுதும் தங்கை பட்டு
போட்டாள் வாயில் பிட்டு
கிட்டு நான்கு லட்டு
பட்டு நான்கு லட்டு
மொத்தம் தீர்ந்தது எட்டு
மீதம் காலித் தட்டு!



# 5 கைவீசம்மா கைவீசு

கைவீசம்மா கைவீசு
கடைக்குப் போகலாம் கைவீசு
மிட்டாய் வாங்கலாம் கைவீசு
மெதுவாய்த் தின்னலாம் கைவீசு
சொக்காய் வாங்கலாம் கைவீசு
சொகுசாய்ப் போடலாம் கைவீசு
கோவிலுக்குப் போகலாம் கைவீசு
கும்பிட்டு வரலாம் கைவீசு



# 6 மாம்பழமாம் மாம்பழம்

மாம்பழமாம் மாம்பழம்
மல்கோவா மாம்பாழம்
சேலத்து மாம்பழம்
தித்திக்கும் மாம்பழம்
அழகான மாம்பழம்
அல்வா போல மாம்பழம்
தங்க நிற மாம்பழம்
உங்களுக்கு வேண்டுமா?
இங்கு ஓடி வாருங்கள்
பங்கு போட்டுத் தின்னலாம்.



# 7 பொம்மை பொம்மை பொம்மை பார்

பொம்மை பொம்மை பொம்மை பார்
புதிய புதிய பொம்மை பார்
கையை வீசும் பொம்மை பார்
கண்ணைச் சிமிட்டும் பொம்மை பார்
தலையை ஆட்டும் பொம்மை பார்
தாளம் போடும் பொம்மை பார்
எனக்குக் கிடைத்த பொம்மை போல்
ஏதும் இல்லை உலகிலே




# 8 தோ... தோ... நாய்க்குட்டி

தோ... தோ... நாய்க்குட்டி,
துள்ளி வாவா நாய்க்குட்டி.
உன்னைத் தானே நாய்க்குட்டி
ஓடி வாவா நாய்க்குட்டி
கோபம் ஏனோ நாய்க்குட்டி?
குதித்து வாவா நாய்க்குட்டி
கழுத்தில் மணியைக் கட்டுவேன்;
கறியும் சோறும் போடுவேன்.
இரவில் இங்கே தங்கிடு.
எங்கள் வீட்டைக் காத்திடு



# 9 சிட்டே சிட்டே பறந்து வா

சிட்டே சிட்டே பறந்து வா
சிறகைச் சிறகை அடித்து வா
கொட்டிக் கிடக்கும் மணிகளைக்
கொத்திக் கொத்தித் தின்னவா
ஆற்று நீரில் குளிக்கிறாய்
அழகாய்த் தூளி ஆடுகிறாய்
சேற்று வயலில் அமர்கிறாய்
திறந்த வெளியில் திரிகிறாய்
உன்னைப் போலப் பறக்கணும்
உயர உயரச் செல்லணும்
என்னை அழைத்துச் சென்றிடு
ஏற்ற இடத்தைக் காட்டிடு



# 10 குள்ள குள்ள வாத்து

குள்ள குள்ள வாத்து
குவா குவா வாத்து
மெல்ல உடலைச் சாய்த்து
மேலும் கீழும் பார்த்து
செல்லமாக நடக்கும்
சின்ன மணி வாத்து





எட்டிப் பிடிக்க நிலா,

சுட்டு தந்த தோசை, பிட்டு தின்ன லட்டு,

கையை வீசி நடந்து கனியைப் பறித்து உண்டோம்,

கண்ணைச் சிமிட்டும் பொம்மை,

வீட்டைக் காக்கும் நாய்,

பறந்து செல்லும் சிட்டு பாசமான வாத்து,

பத்து பாடல்களைப் பாடி பாடி

மகிழ்வாய் நாமும் வாழ்வோம்.







உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com